# ஐ. நா. சபையையன்றி ஆதரவு வேறில்லை!

Phone No. 4502

விலை அரை அணா

Regd. No.M. 5458

இலங்கை, 5 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A.  MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 ]  சென்னை (11—2—50)  வெளியீடு (12—2—50)  [ இதழ் 166

## புரட்சியினின்று போர்மோசாவைக் காப்பாற்றுங்கள்

## சோவியத் புரட்சி திட்டம் கண்டு சோகமுறுகிறோம்

### ஐ. நா. சபையில் தேசீய சீனப் பிரதிநிதி ஓலம்!

பார்மோசாவை பாதுகாத்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கிருக்கிறது. ஆனால் சோவியத் கப்பற்படை அல்லது, விமானப்படை சீனக் கம்யூனிஸ்டுப் படைகளுடன் சேர்ந்து கொண்டு எங்களைத் தாக்காமலிருக்கவேண்டும். சீனக் கம்யூனிஸ்டுகள் இந்தோ-சீனா, பர்மா, தாய்லாந்து, மலேயா, இந்தோனேஷியா, இந்தியா ஆகிய நாடுகளில் புரட்சியை உண்டுபண்ணும்படி ரஷியா சீனக் கம்யூனிஸ்டு சர்க்காரைத் தூண்டுகிறது. ரஷியாவின் இந்தத் திட்டத்தைக்கண்டு நாங்கள் கவலைப்படுகிறோம். பார்மோசாவை சீனக் கம்யூனிஸ்டுகள் மாத்திரமே தாக்குவதாய் இருந்தால் அதனை எதிர்த்துப் போரிட எங்களுக்கு சக்தி உண்டு. ஆனால் ரஷிய கூட்டுறவோடு கூடிய சீனக் கம்யூனிஸ்டுகளின் தாக்குதலைச் சமாளிக்க எங்களால் முடியாது.

எனவே, ஐக்கிய நாடுகள் சங்கம் இச்சமயத்தில் கடற்படை, விமானப்படைகளை அனுப்பி போர்மோசாவை காப்பாற்ற முன்வர வேண்டும். சீனக் கம்யூனிஸ்டுகளுக்கு உதவி செய்ய ஐ. நா. சங்கத்தில் அங்கம் வகிக்கும் எந்த நாடும் முன்வரக் கூடாது.

சீன தேசிய சர்க்காரின் பிரதிநிதியாக ஐ.நா.சபைக்குச் சென்றிருக்கும் டாக்டர் டி எப் திசியாங் அண்மையில் ஐ. நா. சபையில் மேற்கண்டவாறு பேசியிருக்கிறார்.

தோழர் திசியாங் இங்ஙனம் பேசியிருப்பதை 'பேச்சு' என்று குறிப்பிடுவதைவிட 'ஓலம்' என்று குறிப்பிடுவதே சாலப் பொருத்தமுடையதாகும்.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் புரட்சியை உண்டுபண்ணும்படி சீனக் கம்யூனிஸ்டுகளை ரஷியா தூண்டுகிறதாம்; அதுகண்டுதான், திசியாங்கும் பல் கவலைப்படுகிறதாம். ஆனால் தனித்து சீனக் கம்யூனிஸ்டுகள் தாக்கினால் அதை மட்டும் சமாளிக்கும் சக்தி தங்களுக்கிருக்கிறதாம்! ஆகா! போர்மோசா சென்று பதுங்கி வாழும் இந்தப் போர்வீரர்களின் வீரமே வீரம்!

சீனக் கம்யூனிஸ்டுகள் மாத்திரம் தனித்து வந்தால், அவர்களைத் தடுத்து நிற்கும் ஆற்றல் தங்களுக்கு உண்டு என்று மார்தட்டிப் பேசும் இதே சூரர்கள்தாம் சீனாவில் இருக்க இடமின்றி போர்மோஸாவில் அடைக்கலம் புகுந்தனர். அன்று சீனாவின் நிலையைச் சீர்படுத்தமுடிய மக்களின் எழுச்சிக்குமுன் நிற்க முடியாமல புறமுதுகுகாட்டி ஓடி வந்த இந்தப் புண்ணியர்கள், போர்மோசாவுக்குள் புகுந்த பின், சீனக் கம்யூனிஸ்டுகளின் தாக்குதலைத் தாங்க முடியும் என்றும், அதே சமயத்தில் ரஷியாவைக் குறைகூறி ஐ.நா. சங்கத்தைத் துணைக்கழைப்பதும் வெட்கக்கேடான செய்தி.

இந்தத் தேசிய வீரர்களுக்கு வீரமும் தீரமும் இருந்திருந்தால், அதனை சீன எல்லைக்குள்ளேயே காட்டியிருக்கவேண்டும். அதை விட்டு வெளியேறிய பின் வீரம் பேசுவது வீண் பேச்சே!

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பொதுவுடைமைப்புரட்சி தோன்றி வளர்ந்து வருகிறது என்பது உலகறிந்த செய்தி. இப்புரட்சி இயற்கையின்பாற்பட்டது அங்கெல்லாம் மக்கள் அத்தகைய புரட்சியை வரவேற்கின்றனர் எனவே, அது வளருகிறது. அதற்கேற்றாற் போல் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பொருளாதார நிலையும் நெடுங்காலமாக சீர்குலைந்திருக்கிறது. இந்நிலையிலே ய அங்கெல்லாம் பொதுவுடைமைப் புரட்சி தோன்றுவதில் வியப்பென்ன? இதற்குத் தோழர் திசியாங் குறிப்பிடுவதுபோல் ரஷியா பிரமாதமாகத் திட்டமிட்டு வேலை செய்ய வேண்டிய அவசியமேயில்லை அப்படியாயின் தோழர் திசியாங் ஏன் இங்ஙனம் பேசுகிறார் என்ற கேள்வி எழக்கூடும். ஆம்; நியாயமான கேள்வியே. ஆனால் உண்மையை ஆராய்ந்து பார்க்கின்றபோது ரஷியாவுக்கும், அமெரிக்காவுக்குமிடையேயுள்ள பகைமையை வளர்த்து, அதன் மூலம் அமெரிக்காவின் அருளைத்தான் பெறலாம் என்ற எண்ணமே தோழர் திசியாங்கை இங்ஙனம் பேசச் செய்திருக்கிறது என்பது புலனாகும்.

நேரிடையாக ஐ. நா. சபையிடம் இராணுவ பிச்சை கேட்பதற்குப் பதிலாக, ரஷியாவைச் சுட்டிக்காட்டி அமெரிக்காவை அச்சுறுத்தி அதிகாரப் பிச்சைக் கேட்கிறார்.

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

## காணாமல் போன ஸ்பானிஷ்மன்னரின்முடி

### ஏழுநூற்றாண்டுகளுக்குப்பின் அகப்பட்டது!

மாட்ரிட், பிப். 10—

ஸ்பானிஷ் மன்னர் பத்தாவது அல்பான்ஸோ தரித்திருந்த சாணாத போய்விட்ட மகுடமுடி எழுநூற்றாண்டுகளுக்குப் பின், டோலீடோ நீட்ரலிலுள்ள கல்லறையிலிருந்து ஸ்பானிஷ் புதைப் பொருள் ஆராய்ச்சி வல்லுனரான போராசிரியர் கோமஸ் மொரீனோவினால் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது.

இத்துடன் இப்பொழுதும் நல்ல நிலைமையில் இருக்கும் 700 ஆண்டுகளுக்கு முந்திய கத்தியும் நல்ல மணமுள்ள தோல் செருப்பும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

## இந்தியாவின்கைத்தொழில் பெருக்கத் திட்டங்கள்

### பிரிட்டிஷ் பத்திரிகை தரும் தகவல்

லண்டன், பிப். 10—

இந்தியாவின் கைத்தொழில் பெருக்கத்திற்கான திட்டங்கள், மேனாட்டு நிபுணர்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்து வருகின்றனவென்று பிரிட்டிஷ் பத்திரிகை ஸ்டேடிஸ்ட் எழுதியிருக்கிறது. இந்தியாவின் பெருக்கத் திட்டங்களை மிகவும் புகழ்ந்து அப் பத்திரிகை எழுதியிருப்பதாவது:—

பிரிட்டன், அமெரிக்கா பிரான்ஸ், ஸ்விட்ஸர்லாந்து, ஸ்வீடன், ஜெர்மனி ஆகிய நாடுகளின் நிபுணர்களின் யோசனையை இந்தியா ஏற்றிருக்கிறது.

ரயில் என்ஜின்களையும் இந்தியாவே உற்பத்தி செய்துகொள்ள, பிரிட்டிஷ் ரயில் என்ஜின உற்பத்தி நிபுணர்களை இந்தியா சர்க்கார் கலந்தாலோசித்து வருகின்றனர் இயந்திரக் கருவிகள், மின்சார சக்தி உற்பத்தி ரேடியோ, கப்பல் கட்டுவது, விமான உற்பத்தி, ரசாயன எருக்கள், மருந்துகள், சிமெண்ட் உற்பத்தி, ரேடிமேடு வீடுகள் கட்டுதல் முதலிய துறைகளில் இந்தியா முன்னேறியிருக்கிறது என்று அப் பத்திரிகை விபரமாகக் கூறியிருக்கிறது.

## பண்டித நேரு காங்கிரசை விட்டு வெளியேறலாம்?

—(0)—

### ஊழல் பொறுக்காமையே காரணமாம்!

—(0)—

### காங்கிரஸ் தலைவர் ஒருவர் தரும் தகவல்

'பதவிப்பித்து, லஞ்சஊழல், உறவினருக்கு சலுகை காட்டுதல், திறமையின்மை முதலிய புற்று நோய்களுக்காளாகி, காங்கிரஸ் தன்னைத்தானே சாகடித்துக் கொண்டிருக்கிறது.

காங்கிரஸ் தனக்குள்ளேயே பிளவை உண்டுபண்ணிக் கொண்டு அழிகிறது. தன்னுடைய வீட்டைத்தானே இடித்துக் கொள்ளுகிறது. அடுத்து வரவிருக்கும் தேர்தலை இழக்கப்போகிறது. ஐக்கிய மாகாணப் பிரச்னை வேறு எதிர்கால முக்கியப் பிரச்னையாக இருக்கிறது.

காங்கிரஸ் தோழர்களிடம் நேரு காட்டும் பொறுமை முறிந்துபோகும் காலம் அண்மையிலேயே இருக்கிறது இன்னும் ஓராண்டுகாலத்திற்குள் நேரு காங்கிரசை விட்டே விலகக்கூடும்.

காங்கிரசுக்கு இந்நாட்டில் இனியாருமே துணையில்லை. அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கும் எஜமானர்களும், பிர்லா கும்பலும், பணமூட்டைகளும், அடுத்த தேர்தலில் காங்கிரஸ் போட்டியிட முடியாது என்று அறிந்து, கொண்ட காரணத்தால் காங்கிரசுக்கு உதவி செய்வதை நிறுத்தி விட்டன.

இங்ஙனம் ஆதரிப்பாரற்று, அனாதையாகப் போனதால் இந்தியசிற்றரசர்களையும், சர்க்காருக்கு வரிகொடாமல் ஏமாற்றுபவர்களையும் கொள்ளையடித்து, தனது பையை நிரப்பப் பார்க்கிறது காங்கிரஸ். இப்படிப்பட்ட செயல் ஒரு சமஸ்தானத்துக்குரியதே யன்றி, எந்த அரசியல் கட்சிக்கும் ஏற்றதல்ல.''

இவை ஐக்கிய மாகாண எம். எல். ஏ.-வும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினருமான காங்கிரஸ் தலைவர் ஒருவர் உணர்ச்சியோடு ஒரு கடிதத்தில் வெளியிட்டிருக்கும் விஷயங்களாகும். இது "ஆட்டம்" (The Atom) ஆங்கில இதழுக்குக் கிடைத்திருக்கும் செய்தி. வெளிப்படையான சில காரணங்களை முன்னிட்டு இக்கடிதம் எழுதியவர் பெயர் பிரசுரிக்கப்படவில்லை.

—"தி ஆட்டம்"

## மொழிமூலம் ஐக்ய முன்னணி

### ரஷ்யாவின் திட்டம்

லண்டன், பிப். 10—

ரஷ்யாவின் ஆதிபத்யத்தின் கீழுள்ள கிழக்கு ஐரோப்பிய நாடுகளை கிரெம்லினுடன் இன்னும் நெருக்கமாக இணைத்து ஐக்ய முன்னணி அமைக்க ரஷ்யர் திட்டம் போட்டிருக்கின்றனர்.

ரஷ்ய மொழி, இந்தப் பொம்மை நாடுகளில் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் இனி கற்பிக்கப்படும் முதியோர் மாலை நேரங்களில் இம்மொழியைக் கற்கப் பிரத்யேகவகுப்பு நடத்தப்படும்.

ரஷ்ய கலாசாரத்தைப் புரிந்து கொள்ள இம்மொழியைக் கற்க வேண்டியது மிகமுக்கியம் என்று ரஷ்ய சர்க்கார் பிரசாரர்கள் பிரசாரம் செய்து வருகின்றனர். லெனின், ஸ்டாலின் டிசாட்ஸ்கி இவர்கள் எழுதி வைத்துவிட்டு சென்றதையெல்லாம் படிக்க ரஷ்ய மொழி தெரிந்திருப்பது இன்றியமையாதது என்று தொழிலாளர்களிடையே பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது.

ரஷ்ய மொழியை கிழக்கு ஐரோப்பாவிலுள்ளவர்கள் கற்றிருந்தால் அவர்கள் தனி மதிப்புடன் இனி நடத்தப்படுவர் என்று தெரிகிறது.

———

லேக் ஸக்ஸஸ், பிப். 10—

மத்யகிழக்குப் பொருளாதார கமிஷனை ஏற்படுத்துவதை 1951 வரை ஒத்திப்போடலாம் என்ற ஏஜெண்டா கமிட்டி சிபார்சை, ஐ. நா. சமூக பொருளாதாரக் கௌன்ஸில் ஏற்றுவிட்டது.

மாலை மணி

சென்னை 11—2—50 சனிக்கிழமை

# குழந்தைகள் மசோதா

"தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்பது, தமிழகத்தில் வழங்கிவரும் ஒரு சிறந்த பழமொழியாகும். ஒருவருக்கு இளமையில் படியும் பண்புகள், வாழ்நாள் முழுவதும் தலை காட்டியே தீரும் என்பதே அந்தப் பழமொழியின் கருத்தாகும்.

இளமையில் எற்படும் தீய பழக்க வழக்கங்கள் களையப்படாமல், விட்டுவிடப்படுகின்ற காரணத்தால்தான், சமுதாயத்தில் தீயவர்கள் நடமாடுகிறார்கள் என்றும், நற்பண்புகளை விட தீய பண்புகள் எளிதில் கடைப் பிடிக்க ஏதுவாக இருக்கின்ற காரணத்தால் தீயவர்களின் எண்ணிக்கை, நல்லவர்களின் எண்ணிக்கையை விட அதிகமானதாக இருக்கிறதென்றும், அங்ஙனமாற இளைஞர்கள் இளமைப் பருவத்திலேயே திருத்தப்பட வேண்டும் என்றும் உலக அறிஞர்கள் அவ்வப்போது அறிவுரை பகர்ந்து வருகிறார்கள்

இளைஞர்கள் திருத்தப் பட்டால், வருங்கால சமுதாயமும் திருந்தும் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, சென்னை அரசியலார் இளைஞர்களைத் திருத்துவதற்கான "குழந்தைகள் மசோதா" என்றவொரு சட்டத்தை நடைமுறை ஆட்சிக்குக்கொண்டுவரத் திட்டமிட்டுள்ளார்கள். சிறுவர்—சிறுமியர்களில் குற்றமிழைப் போரையும், அடங்கி நடவாதவரையும், அனாதைகளாகத் திரிவோரையும் கண் காணிப்பில் கொண்டுவந்து, பாதுகாப்பு அளித்து, கல்வி சீர்திருத்தப் பயிற்சி மூலம் பயனுள்ள நல்லறிவு புகட்டி, நல்லவர்களாக்கி நாட்டில் நடமாட விட வேண்டும் என்ற நோக்கத்தைக்கொண்டு, மசோதா கொண்டு வரப்படுகிறது. நோக்கம் வரவேற்கத்தக்க, பாராட்டத்தக்க, போற்றத்தக்க நோக்கந்தான். ஆனால் நோக்கம் நிறைவேறுமா என்பதுதான் ஐயப்பாட்டிற் குள்ளதாக இருக்கிறது!

இது வரையில் நிறைவேற்றப்பட்டிருக்கும் மசோதாக்கள் எதுவும் முழு வெற்றி தரும் அளவில் நிறைவேற்றப் பட்டதில்லை; நிறைவேற்றி வைக்கும் அளவில் ஆளவந்தவர்களிடம் ஆற்றலும், திறமையும், ஆர்வமும் இருந்ததில்லை; மசோதாக்களின் சட்ட திட்டங்களுக்கு ஆளாகும் மக்களும், மனப் பூர்வமாக அவற்றை ஏற்றுக்கொண்டு நடை முறையில் நடத்திக்காண்பித்ததில்லை. மசோதாவின் குறைபாடு ஒரு பக்கம்; மக்களின் குறைபாடு மற்றோர் பக்கம்; இவை இரண்டும் பொருந்தும் வகையில் காண முடியாமல் அலங்கோல ஆட்சி நடத்தும் ஆளவந்தார்களின் குறைபாடு வேறோர் பக்கம். இவையெல்லாம் சேர்ந்து எதுவும் சரிவர நடைபெற்றதில்லை. எனவேதான், இந்த மசோதாவும் எப்படி நடைபெறப் போகிறதோ என்ற சந்தேகம் பிறக்கிறது.

குற்றமிழைத்த இளைஞர்களைப் பிடித்துச் சீர்திருத்த முற்படும் அரசாங்கம் அவர்கள் ஏன் குற்றமிழைக்கிறார்கள் என்ற அடிப்படைச் சூழ்நிலை காரணங்களைக் கண்டறிந்து, அப்படிப்பட்ட சூழ்நிலைகளை அகற்ற ஆவன செய்யவும் முற்பட வேண்டும். இல்லாவிடில், குற்றமிழைப்போரின் தொகை வளர்ந்துகொண்டேயிருக்க, அதைச்சீர்திருத்திக்கொண்டேயிருப்பது என்பது வீண்வேலையாக முடியும் என்பது மட்டுமல்லாமல், பொருள்-நேரம்-உழைப்பு பாழ்படவும், பயன் தராத நிலை எற்படவுந்தான் செய்யும். நச்சுநீர் ஓட்டம் அப்புறப்படுத்தப்படும் முயற்சி, ஒரு பக்கம் நடைபெற்றாலும், நச்சுநீர் உற்பத்தியாகும் ஊற்றுக்கண் உடனடியாக அடைக்கப்பட வேண்டும். அடைக்கப் பட்டால் தான் மேலும் மேலும் நச்சுநீர் வழியாமலிருக்கும்; ஏற்பட்ட நச்சுநீர் ஓட்டமும் சிறிது சிறிதாக அழிந்து மறைந்துபோகநேரிடும்; இல்லையெனில் சீர்திருத்தம் என்பதற்கு முடிவே இல்லாமல் போய்விடுவதோடு, அர்த்தமும் இல்லாமல் போய்விடும். எனவே தான் நச்சுநீர் ஊற்று அடைக்கப்படுவது முக்கிய குறிக்கோளாக இருக்க வேண்டும் என்கிறோம். குற்றம் இழைப்போரைச் சீர்திருத்துவதோடு கூட, குற்றங்கள் இழைக்க சாதகமாக இருக்கும் சமுதாயச் சூழ்நிலைகள் பெரு அளவில் மாற்றப்பட வேண்டும். சூழ்நிலைகள் நல்ல முறையில் அமைந்தால், அவற்றினிடையே தவழ்ந்து வளர்பவர்கள் நல்லவர்களாகத் தோன்ற வழியேற்படும்.

தெருக்களில் சோம்பித்திரிதல், அனாதைகளாக அலைதல், 'கேடி'களோடு சுற்றிக் 'கேடி'களாக மாறுதல், பொய் கூறுதல், களவு செய்தல் குடித்தல், கொலை செய்தல், சோரம் போதல், பிச்சை எடுத்தல் போன்ற ஒழுக்கக் குறைவான செயல்கள் புரிதல், பிறர்க்குத் துன்பந்தரும் எல்லாவகைச் செயல்களையும் புரிதல் ஆகிய இவற்றைச் செய்யும் சிறுவர் சிறுமியரைத் திருத்தவே, சென்னை அரசாங்கம் மசோதா கொண்டுவருவதாகச்சொல்லுகிறது. இந்த இளங்குற்றவாளிகள் அனைவரும் குற்றவாளிகளாக மாறுவதற்கு முதற் காரணம் வறுமை, அதைத் தொடர்ந்து ஏற்படும் பசி, பட்டினி, ஆகியவையேயாகும். கல்வியறிவின்மையின் காரணத்தினாலும், தீயப் பழக்கத்தில் ஏற்படும் விருப்ப மேலீட்டின் காரணத்தினாலும் குற்றவாளிகளாக இளைஞர்கள் மாறுகிறார்கள்; ஆகவே வறுமை, அறியாமை என்ற இரண்டு குற்றவாளிகளும் அப்புறப்படுத்தப்பட்டால் தான், இளங்குற்றவாளிகள் தோன்றாமலிருக்க முடியும். இல்லையெனில், குற்றவாளிகளின் எண்ணிக்கை என்னதான் சீர்திருத்தம் செய்தாலும், வளர்ந்துகொண்டுதான் இருக்குமேயொழிய குறையாது. வறுமை அறியாமை இரண்டையும் போக்க இன்றைய சென்னை அரசாங்கத்தில் திட்டமும் இல்லை; தீட்ட தீரமுமில்லை. இந்த நிலையில் தான் குழந்தைகள் மசோதா வெற்றியைத் தருமா என்று ஐயங்கொள்ள இடமேற்படுகிறது.

இன்றைய சமுதாய வாழ்வில், பல்வேறு துறைகளிலும் பல்வேறு வகைகளில், பல்வேறு உருவில் நடமாடிக் கொண்டிருக்கும் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு ஏற்படுத்தப்பட்டச் சட்டம் ஏதும் செய்யாமலிருக்கும் போது, மேலும் சமுதாயக் குற்றவாளிகளை உற்பத்தியாக்கும் சாதனங்கள் அனைத்தும் அப்படியே காப்பாற்றப்பட்டு வரும் போது குழந்தைகள் எப்படிக் குற்றவாளிகளாக மாறாமலிருப்பார்கள்? குழந்தைக் குற்றவாளிகள் பெருகுவதற்கு இடங்களையெல்லாம் வைத்துவிட்டு அவர்களைக் கட்டுப் படுத்தமட்டும் மசோதா கொண்டுவருவதால், உருவான பலன்ஏற்படமுடியாது என்றே கூறலாம்.

அரசாங்கத்திற்குத் துணிவிருந்தால், குழந்தைகள் பிறந்தவுடனே அல்லது பிறந்து குறிப்பிட்ட சில காலத்திற்குள்ளாகவோ குழந்தைகளையெல்லாம் தன்னுடையதாக ஏற்றுக் கொண்டு, பயிற்சி கொடுத்து, வளர்த்து வந்து, ஆடவராகவும் பெண்டிராகவும் ஆக்கிவிட்டு சமுதாயத்தில் தனியே நடமாடவிடும் பணியை ஏற்றுக் கொள்ளலாம். இந்தப் பணியைச் செய்ய அரசாங்கம் முற்பட்டால் இளங் குற்றவாளிகள் ஏற்பட வழி ஏற்படாது. குழந்தைகள் அரசாங்கத்தின் சொத்துக்களாகஆகிவிடுகின்ற காரணத்தால், இதைச் செய்ய இப்பொழுது துணிவும் கிடையாது; திட்டமும் கிடையாது.

இளங் குற்றவாளிகள் தோன்றாமலிருப்பதற்கு, பெற்றோர்களுக்கும், கண் காணிப்பாளர்களுக்கும் தண்டனைகள் விதிப்பதன் மூலம் வழி காணலாம் என்று மசோதா கருதுகிறது. குழந்தைகளுக்குக் கொடுமை யிழைப்பது அவர்களை அசட்டையாகவிடுவது பிச்சை எடுக்கச் செய்வது, பந்தயம் போடவோ, கடன் வாங்கவோ நிர்பந்திப்பது, குழந்தைகளிடம் அடகுச் சாமான் வாங்குவது யுவதிகளை ஏமாற்றிக் கடத்திச் செல்வது, புகைப்பிடிக்கும் சாமான்களை விற்கச் செய்வது, புகைபிடிக்க ஊக்க மூட்டுவது, முதலிய பல்வேறு குற்றங்களைச் செய்யும் பெற்றோர்களுக்கும் பிறமுத்தோர்க்கும் ஒரு மாதம் முதல் மூன்று ஆண்டுகள்வரை சிறைத் தண்டனையும், ரூ 100 லிருந்து ரூ. 200 வரை அபராதமும கொடுக்க மசோதா எண்ணுகிறது. சூழ் நிலைகள் மாற்றப் படாமல், குழந்தைகள் செய்யும் குற்றங்களுக்குப் பெற்றோர்களைக் காரணமாக்கித் தண்டனை கொடுக்கும் விதத்தில் எப்படித் தெளிவான நிலைமையைக் கண்டறிய முடியும். சட்டம் வீணாவதற்கும், கவனிக்கப்படாமல் போவதற்கும் ஆன நிலைமைக்கு எளிதில் வந்துவிடுமேயல்லாது, உருவான பலனைத் தந்துவிடும் என்று சொல்லுவதற்கு இயலாத நிலைமையிலேயே மசோதா அமைந்திருக்கிறது.

மசோதாவைத் திறம்பட அமுலுக்குக்கொண்டுவந்தால், அந்த வகையில் ஓரளவுக்கு நன்மை ஏற்படலாமேயொழிய முற்றும் முடிந்த அளவில்பயன் தரும் என்று கொள்வதற்கில்லை. முழுப்பயனும் ஏற்பட்டு, இளங் குற்றவாளிகளே இல்லாமற் போய், அதன் மூலம் சமுதாயத்தில் குற்றவாளிகள் இல்லாமற் போகும் ஒரு நல்ல நிலைமைஏற்படவேண்டுமாயின் வறுமையும், அறியாமையும் அடியோடு அகல வேண்டும்; குழந்தைகள் அரசாங்கத்துச் சொத்துக்களாக்கப்பட்டு, வளர்க்கப்பட வேண்டும்! அப்பொழுது பசியும், பட்டினியும், பிணியும் குறைபாடுகளும் பெரும் அளவில் குறைய வழியேற்படும். அந்நிலையை அடைய அரசாங்கம் முன்னேக்கிச் செல்லவேண்டும். சென்றால் குழந்தைகள் மசோதாவின் நோக்கம் நிறைவேறும்.

---

# வாசகர்களுக்கு !

**20-2-1950 முதல் "மாலை மணி" உலகச் செய்திகளைத் தாங்கி பெரிய அளவில்வெளிவருவதற்கான ஏற்பாடுகள் யாவும் துரிதமாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.**

**'மாலை மணி' ஏஜண்டுகள் தங்களுடைய பாக்கி பூராவையும் 16-2-'50குள் அனுப்பவேண்டும். அப்படி அனுப்பத் தவறும் ஏஜெண்டுகளுக்குக் கட்டாயம் பத்திரிகையைத் தொடர்ந்து அனுப்ப முடியாதென்பதை இதன்மூலம் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.**

**"மாலை மணி" பதிப்பகத்தார்.**

---

## ஐ. நா. சபையே . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தோழர் தியங். சி இந்தப் பிச்சை கோரும் படலம்தான் தேசிய சீனாவின் வீரப்பேச்சாக ஐ. நா. சபையிலே காட்சியளித்திருக்கிறது. இதுதான் உண்மை. இந்த உண்மையை உணராத காரணத்தாலோ, அன்றி உணர்ந்திருந்தும் ரஷியாவிடம் கொண்ட வெறுப்பின் காரணமாகவோ நம் நாட்டுச் செய்தித்தாள்கள் சில, தோழர் தியாங்கின் பேச்சைப் பெரிதாக்கி, மாஸ்கோவிடம் முட்டிக்கொள்ளுகின்றன. ஆனால், எது எப்படியாயினும் பொதுவுடைமைப்புரட்சிகென்கிழக்கு ஆசியாவில்ஆக்கம்பெற அடிப்படை காரணமாயிருப்பது பொதுவுடைமைத் தத்துவத்தின் வலிமையேயன்றி வேறொன்றுமில்லை.

---

## கழகத் தோழர்களுக்கு

திருச்சியில் 1-1-50-ந் தேதி நடைபெற்ற தி மு. க. பொதுக் குழுக் கூட்டத்தில் நிறைவேறியுள்ள தீர்மானத்தையொட்டி, இதுவரை உறுப்பினர் சேர்க்கும் இரசீது புத்தகங்கள் பெற்றுள்ள தோழர்களும், குறிப்பாக கிளைக் கழக நிர்வாகிகளும் இம்மாத முடிவுக்குள் ஏராளமான உறுப்பினர்களைச் செயலாளர், (மாவட்டக் கமிட்டி அமையப் பெறாத இடங்களில்) அமைப்பாளர்கள் ஆகியோரிடம் இரசீதுகளையும், அதற்கான தொகையையும் செலுத்தி விட வேண்டுமென்று நினைவூட்டுகிறேன்.

மாவட்டச் செயலாளர்களுக்கும், அமைப்பாளர்களும் உறுப்பினர் சேர்க்கும் பணியினை மிக முக்கியமாகக் கருதி, தலைமை நிலையத்திலிருந்து தாவித்துள்ள இரசீது புத்தகங்களையும்—உறுப்பினர் சேர்த்த சந்தா தொகையினையும், மார்ச்சு மாத முடிவுக்குள் தலைமை நிலையத்துக்குத் தவறாமல் அனுப்பி வைக்கவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

தி மு. க. ஆக்கவேலைகளில் முக்கியமானதான இ முதற் கடமை', தி மு. க. தோழர்கள் அன்புகூர்ந்து கவனத்தில் வைத்து, உடனடியாக ஆவன செய்யுமாறுவேண்டிக் கொள்கிறேன்.

[குறிப்பு:—இதுவரை மாவட்டக் குழு நிறுவப்படாத, இடங்களிலும், மார்ச்சு 15 ந் தேதிக்குள், அந்தந்த அமைப்பாளர்கள்,மேற்படிகுழுவை, அமைப்பு முறையுடன் நிறுவ வேண்டுமாறு பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.]

என். வி நடராசன்
செயலாளர்,
அமைப்புக்குழு, தலைமை நிலையம்
தி. மு. க.

---

## அறிவுக் கதிர் !

ஒவ்வொரு சமையல் காரனும் கூட அரசாங்கத்தை நிர்வகிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

—லெனின்

# நாட்டு நடப்பு

### திருக்குறள் வகுப்புத் துவக்கவிழா

சென்னை, பிப் 7—

6—2—50 ஞாயிறு காலை 9.30 மணிக்கு டாக்டர் சி. நடேசன் மன்றத்தின் சார்பில் "திருக்குறள் வகுப்புத் துவக்க விழா தோழர் எஸ் செல்வராஜ் பி. எஸி, அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சென்னை மாநிலக்கல்லூரி தமிழ்த் துணைப்பேராசிரியர் தோழர் ஜி பெருமாள் பி. ஓ. எல். (ஆனர்ஸ்) அவர்கள் துவக்கி வைத்தார். விவேகானந்த கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் பி. ஜெகன்னாதாச்சாரியார் எம். ஏ. எல். டி. பி. ஓ. எல். திருக்குறள் கற்பதின் அவசியத்தை வற்புறுத்திப் பேசினார்கள்.

* * *

### இளைஞர் தமிழ்க் கழகம்

போளூம்பட்டி, பிப். 20 —

இவ்வூர் இளைஞர் தமிழ்க் கழகத்தின் சார்பாக 17—1—50ல் ஆஸ்பத்திரி மைதானத்தில், வ. உ. சி. நகரவில் பொங்கல்திருவிழாக்கூட்டம் தோழர் திரு எ. வெங்கிடேசனார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் தோழர் சி. என். அண்ணாதுரை. கல்யாணசுந்தரம் செங்கற்கட்டு எம். சின்னையா, கொடியேற்றம் செயமன் முதலியோர் திருவிழாவைப்பற்றி விரிவாகப் பேசினார்கள் முடிவாக தோழர் ர. து. ஞானசேகரன் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

* * *

### வ உ, சி. வாசகசாலை திறப்பு விழா

குதர்ராம்பல்லி, பிப். 3 —

அன்றுமாலை இவ்வூர் போர்டு பாடசாலையில் தலைமை ஆசிரியர் தோழர் தேவ்பார்ப்பணுச்சார் அவர்கள் தலைமையில் இலவசவாசகசாலை அமைப்புக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் கிராமத்தின் முக்கியஸ்தர்கள் பலரும் வந்திருந்தனர். தலைவர் கொண்டுவந்த தீர்மானப்படி கிராமத்தில் ஒரு இலவச வாசகசாலை அமைப்பதென்றும், அதற்கு மறைந்த மாவீரன் கப்பல் ஓட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம் பிள்ளையின் பெயரை வைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. வாசகசாலைக்கு நன்கொடைகளும் சந்தாவும், வசூல் செய்யப்பட்டது.

* * *

### ஆண்டு நிறைவு விழா

வலையப்பட்டி, பிப். 2—

வலையப்பட்டி சுதந்திர சூரிய சங்கத்தின் மூன்றும் ஆண்டுநிறைவு விழா 28—1—50 சனிக்கிழமையன்று தோழர் செ. திருநாவுக்கரசு எம். ஏ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது அவ்வமயம் பன்னத்தூர் சுப. அருணாசலம் அவர்களும் சென்னை இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்களும் சொற்பொழிவாற்றினார்கள். ஏராளமான மக்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர். கூட்டம் இனிது முடிவுற்றது. (ஒ-பி)

* * *

### கவி அரங்கம்

சென்னை, பிப். 6—

சென்னைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் கவி அரங்கம் ஒன்று சிந்தாதிரிப் பேட்டை உயர்நிலைப் பள்ளியில் கூடியது. தோழர் சாம்பசிவ சர்மா தலைமை தாங்கினார். கவிஞர்கள் சு. கு. ஆதித்தர், இராம. சுப்ரமணியம், மதனகோபால், தணிகை, சாரசி இளந்தமிழன், தமிழ் அண்ணல், பாரதிமோகன். ஆகியவர்கள் தத்தம் கவிகளைப் படித்துக் காட்டினர். 'கவிதையில் புரட்சி' என்ற தலைப்பைக்கொண்டு தோழர் சாம்பசிவ சர்மா எடுத்துக் காட்டுகள் பல காட்டி அழகுறப் பேசினார். இனியும் வரும் மார்ச் மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை கவி அரங்கம் கூட வேண்டும் என்று ஏகமனதாகத் தீர்மானித்த பிறகு, செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது கலைந்தது.

* * *

### திருவள்ளுவர் நினைவு நாள்

சென்னை வண்ணாரப்பேட்டை தியாகராயர் உயர்நிலைப்பள்ளி சார்பில் 2-2 50 மாலை 6 மணிக்கு திருவள்ளுவர் நினைவு நாள் விழா, நடைபெற்றது. விழாவிற்கு முன்னை மேயர் எம். இராதகிருஷ்ணன் அவர்கள் தலைமை தாங்கினர் பள்ளியின் நிர்வாகிகளுள் ஒருவரான பி. இராமசாமி அவர்கள் எல்லோருக்கும் நல் வரவு கூறினர் பள்ளித் தலைவர் பி. பார்த்தசாரதி அவர்கள் தலைமை ஆசிரியர்தோழர் ஆர். சந்திரசேகரம் ஆகியோர் கூட்டத்திற்கு வந்திருந்து விழாவினைச் சிறப்பித்தனர்.

தோழர் ராமேஸ்வரராவ் அவர்களும், ஆசிரியர் தோழர் ம. இராசமாணிக்கனார் அவர்களும் முறையே "திருவள்ளுவரும் மருத்தும்" "நன்றிக்கு வித்தாகும் ஒழுக்கம்" என்ற அரிய பொருள்களைப்பற்றி அழகாக பேசினார்கள்.

தலைவர் முடிவுரைக்குப்பின், தலைமைத் தமிழாசிரியர் வித்வான் தோழர் இ. மு. ஆறுமுகனார் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

* * *

### இந்தி வேண்டாம்!

தேனி, ஜன. 30—

தேனி நாடார் சரஸ்வதி உயர்நிலைப் பள்ளி 'பார்லிமெண்ட்' கூட்டம் மதுரை மாவட்ட கல்வி அதிகாரி, பள்ளி தலைமை ஆசிரியர், இதர ஆசிரியர்கள் முன்னிலையில் 24—1—50 ல் நடைபெற்றது.

கூட்டத்திற்கு 70பார்லிமெண்ட் உறுப்பினர்கள் வந்திருந்தனர். அப்போது பள்ளி மந்திரிசபையால் (தலைமை ஆசிரியரின் தூண்டுதலின் பேரில்) "நமது பள்ளியில் I முதல் VI ம் பாரம் வரை இந்தி கட்டாய பாடமாக போதிக்கப்படவேண்டும்' என்னும் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

அப்போது தீர்மானத்தை ஆதரித்து தோழர் மாரிமுத்து பேசினார். 'இந்தி வேண்டாம் நமக்கு" என்றும், கொண்டுவந்த தீர்மானத்தை எதிர்த்தும், தோழர்கள் எஸ். கே. தங்கமுத்து. எஸ். ஆர். சாமியப்பன் ஆகியோர் பேசினர்.

பின்னர் கூட்டத்தில் தீர்மானம் பற்றி ஓட்டெடுக்கப்பட்டது. தீர்மானத்துக்கு சாதகமாக 19 ஓட்டுகளும் தீர்மானத்தை எதிர்த்து 36 ஓட்டுகளும் கிடைத்தன. மற்றவர்கள் நடுநிலைமை வகித்தனர். பள்ளி பார்லிமெண்டில் மதுரை மாவட்டக் கல்வி அதிகாரி முன்னிலையில் '1ம் பாரம் முதல் 6ம் பாரம் வரை இந்தி கட்டாயமாகப் போதிக்கப்பட வேண்டும்" என்னும் தீர்மானம் மெஜாரிட்டியினரால் தோற்கடிக்கப்பட்டது. மதுரை மாவட்டக் கல்வி அதிகாரி கடைசியில் தீர்மானம் பற்றி ஒன்றும் பேசவில்லை.

* * *

### தமிழ்த் திருநாள்

இடையக்குறிச்சி, ஜன. 30—

உ. நா. இடையக்குறிச்சி, நாட்டாண்மைக் கழகத் துவக்கப் பள்ளியின் "வெற்றிக்கழகத்தின்" சார்பாக 14-1-50 காலை 9 மணிக்கு மாணவ, மாணவிகளின் போட்டி விளையாட்டும் மாலை 4-30-மணிக்கு சென்னை உயர்திரு மறைமலையடிகளாரின் திருமகன் தோழர் டாக்டர் மறை. சுந்தரமூர்த்தி அவர்களின் தலைமையில் "தமிழ்த் திருநாளும்" சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பொன்பரப்பி, நடுநிலைப்பள்ளி ஆசிரியர் தோழர் ஆர். இளையபெருமாள் அவர்களால் போட்டி விளையாட்டில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

தோழர்கள் இராமசாமி, சின்னப்பிள்ளை, பெருமாள், சிவர், இரா. நடராசன், இ. வே. இராமசாமி, அரசாங்கம் தங்கவேல் நயினார், சவரிநாயகம் முதலியவர்கள் பொங்கல்விழாப் பற்றியும் கல்வி முன்னேற்றங்கள் பற்றியும் விரிவாகப் பேசினார்கள். கோ. குழந்தைவேலன் அவர்களால் நன்றிகூற இரவு 8 30 மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

* * *

### முதியோர் கல்வி வார விழா

பெண்ணாடம், பிப். 7—

டி விழாவின் மூன்றும் நாள் கூட்டம் 5-2 50ல் பெண்ணாடத்தைச் சேர்ந்த சொத்தட்டையில் பெண்ணாடம் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் திரு. ம. கோவிந்தசாமி அவர்கள் தலைமையில் கூடியது. ஆரம்பப் பள்ளி மாணவ, மாணவிகள் முதியோர் கல்வியின் அவசியத்தைப் பற்றி சம்பாஷணைகள் நடத்தினார்கள். பிறகு ஆசிரியர் திரு. எஸ். ராமமூர்த்தி அய்யர் அவர்களும், திரு சிவ வழமலை அவர்களும் மேற்படி திட்டத்தைத் தொடர்ந்து வேலை செய்யும்படி தவ்வூர் பொது மக்களைக் கேட்டுக்கொண்டார்கள். அவ்வூர் பெருநிலக்கிழார் திரு. ச. முத்துக்குமாரசாமி அவர்கள் அனைவர்க்கும் ஓர் விருந்தளித்து உபசரித்தார்.

---

## ஆசிரியருக்கு முடங்கல்

### பொய் செய்திக்கு மறுப்பு!

ஐயா!

5—2—50 தார்மிக இதழில் வெளியான "மதுரைக் கல்லூரியில் சு. ம. க்கள் விஷமம்" என்ற செய்தியைப் பார்த்தவுடன் திடுக்கிட்டேன். அன்று நடந்த திருக்குறள் முனிசாமி அவர்கள் கூட்டத்திற்குச் சென்ற பழைய மாணவனானதால் நான் உண்மையை எழுத கடமைப்பட்டிருக்கிறேன்.

மாணவர் தலைவர் மீது சாட்டப்படும் குற்றங்கள் அர்த்தமற்றவை. "திராவிட கழக குண்டர்களைக் கலாட்டா செய்ய கற்களுடனும் குண்டாந்தடிகளுடனும் 'வரவழைத்ததாக ஷைகிக்கிறர், "பார்ப்பனன்" என்ற புனைபெயருடைய கல்லூரியின் தலைவர் தமிழ்ப் பண்டிதர். (அவருக்கும் தார்மிக இதழுக்கும் உள்ள தொடர்பு எனக்குத் தெரியும்) மாணவர்களை விசாரித்த வரையில் இவ்வாண்டு பிராமணீயம் தலைவிரித்து தாண்டவமாடுகிறது. காரணம், ஈ. ஸ. சே. சங்கத்தைப்-போட்டேல ஜம்பலைச் சேர்ந்த உதவி தலைமை ஆசிரியர் வந்ததே காரணம், பிராமண மாணவர்களைத் தேர்ந்தெடுத்து ரகசிய வேஷக்காரர்களாக (Spies) உபயோகிக்கும் கொடுமை புதிது. எந்தக் கல்லூரியிலும் கண்டிராத புதுமை! குற்றத்திற்குக் காவில் விழுந்து கும்பிடும்படி வற்புறுத்தியிருள் இரக்கமற்ற அரக்கன். கோல்வல்லாருக்கு விருந்து. குறள் முனிசாமிக்கு அழுதல்! கேவலமான முறையில் நடந்துகொண்டனர் தலைமை தமிழ்ப் பண்டிதரும் மற்றவர்களும் முனிசாமியிடம் கல்லூரிக் கட்டடத்தை தாக்கத் திட்டமிட்டார்களாம். எவ்வளவு பூசல்! எழாவது அறிவுப்படைத்தவர்களல்லவா?

வகுப்பு துவேஷத்தை வளர்ப்பவர்கள் யார்? தார்மிக இதழுக்கு எழுதியும் மாணவர்களிடையே பேசியும் வகுப்புவாதத்தை செப்பிவிடும் பொறுப்பற்ற இந்த ஆரிய ஆசிரியர்களே. பொதுமக்கள் இந்த விஷயத்தில் கவலையாக இருக்க வேண்டும். கல்லூரி ஆசிரியர்களின் போக்குக் கண்டிக்கத் தக்கது.

தார்மிக இதழில் வெளியான செய்தி வெறும் பொய் பித்தலாட்டம். கூட்டம் கலவரமின்றி முடிவடைந்தது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

"பழைய மாணவன்"

---

## தி. மு. கழகக் கூட்டங்கள்

### 12—2—50

| | |
|---|---|
| வேலூர்:— | க. அன்பழகன். |
| மேலக்கற்கண்டார்கோட்டை:— | சி. பி. சிற்றரசு, ஜி. பராங்குசம். சு. காளிமுத்து. |
| விருதுநகர் :— | டி. கே. சீனிவாசன், கே. ஏ. மதியழகன். |
| (மதுரை மாவட்டம்) மேலூர் மதுரை | சி. என். அண்ணாத்துரை என். வி நடராசன், |

### 13-2-50

| | |
|---|---|
| சோழவந்தான் (மதுரை);— | சி. என் அண்ணாத்துரை, என். வி. நடராசன். |

---

# தி. மு. கழகப் பொதுக் கூட்டங்கள்

### மாயவரம்

மாயவரம், பிப் 8—

இந்நகர் திராவிட முன்னேற்றக்கழகத்தினரால் 4-2-50-சனி அன்றைய மாலை 6-மணிக்கு நகராட்சிப் பூங்காவில், ஒருமாபெரும் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. சுமார் 2000-த்திற்குமேல் மாணவத் தோழர்களும். தோழியர்களும், பொது மக்களும், தொழிலாளத் தோழர்களும் மட்டற்ற ஆர்வமுடன் கூட்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர். தோழர் சிகாமணி இயக்கப் பாடல்களும், நாட்டுப் பண்ணும், வெகு அழகாகப் பாடி மகிழ்வித்தார். பின்னர் தோழர் ஆர். பழனிசாமி அவர்கள்; தலைவரை முன்மொழிய, தோழர் செ. ராமசாமி வழிமொழிய, தோழியர் மூவலூர் இராமமிர்தத்தம்மையார் கூட்டத்திற்குத் தலைமை வகித்து, கூட்டத்தின் நோக்கத்தை எடுத்துரைத்தார். தோழர்கள் என். வி. நடராசன், க. அன்பழகன் ஆகியோர் தற்கால புது அரசியலும், நமது கடமையும் என்னும் தலைப்பில், தற்கால காங்கிரஸ் ஆட்சியின் அவல நிலைகளையும், அடி ஆட்சியின் பெயரால் வடவரது பிடியில் திராவிடம் சிக்குண்டு சீரழிவதையும், தி. மு. க. மேற்கொள்ளப்போகும் சட்டபூர்வமான நடவடிக்கைகள் குறித்தும், யாவரும் தி. மு. கவில் உறுப்பினராகச் சேரும்படியும், பல அரிய கருத்துக்களுடன் நீண்ட சொற்பொழிவாற்றினர்.

பின்னர் செயலாளர் வை மாணிக்கம் நன்றிகூற கூட்டம் முடிவடைந்தது.

---

### இராசாமடம்

இராசாமடம், ஜன. 30—

23-1-50 திங்கட்கிழமை மாலை 7-மணியளவில் இவ்வூர் தி. மு. க. துவக்க விழா, மூத்தம்பேட்டை தோழர் எஸ். எம். என். ரசாக் அவர்கள் தலைமையில் நடந்தேறியது. கூட்டம் தோழர் ஏ. கே. சுந்தரம் இயக்கப் பாடல் பாடியபின் ஆரம்பமானது.

தோழர் மகதேவ, தோழியர் எ. சாவித்திரி அம்மையார், தோழர்கள் டி. எஸ். கல்யாணசுந்தரம், மாணவர் நூர்தீன், எம். என். எம். ஷரீக் ஆகியோர் தி. மு. க. குறிக்கோளினையும், அரசியலாரின் அநியாயமைப் போக்கினையும் கண்டித்து, மிக விரிவாகச் சொற்பொழிவாற்றினார்கள்.

### நெடும்பலம்

நெடும்பலம், பிப். 8—

இவ்வூர் துவக்க விழா 5-2-50 அன்று மாலை 6-மணி அளவில், ஆசிரியர் வேலாயுதம் வந்தலில், தோழர் ராசாராஜன் அவர்கள் திராவிடம் பண்ணுடன் கூட்டம் ஆரம்பமாகியது. 500-க்கு மேற்பட்ட மக்கள் கூடினர். தோழர் என். எஸ். தஞ்சதபாதம் ராஜாமடம் டி. பி. ஏ. மதியழகனைத் தலைமைத் தாங்கும்படி கேட்டுக்கொண்டார் தோழர் மதியழகன் தலைமை தாங்கினார். ஷ கூட்டத்திற்கு எம். கே. ஹாஜாபீர் அவர்கள் உடல்நிலை சரியில்லாததால் அவரால் முடியாமையால், ஷ வார் தலைமை தாங்கினார். தொடர்ந்து, தோழியர் டி. பி. ஏ. சாவித்திரி அம்மையார் தி. மு. கழகம் பற்றி சுமார் அரை மணி நேரம் உணர்ச்சி மிக்க சொற்பொழிவாற்றினார் அடுத்து திருவாரூ தோழர் எம். ஜமால் அதிராம்பட்டினம் என். எஸ். இளங்கோ ஆகியோர் அரசியலும் தற்காலிக நிலையும் என்பது பற்றி சுமார் 2 மணி நேரம் ஆர்வமிக்க சொற்பொழிவாற்றினர். முதற்கண் வைத்தியவள்ளல் ஈ. வெ கிருஷ்ணசாமி அவர்கள் மறைந்ததைக்கு அனுதாப தீர்மானம் என். எஸ். இளங்கோ அவர்களால் கொண்டுவரப்பட்டு ஐந்து நிமிஷ நேரம் அனைவரும் அமைதியாய் இருந்து அன்னார் குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவித்து கொண்டனர். இரவு 9-30 மணிக்கு துணைச் செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

---

### வட ஆற்காடு மாவட்ட அமைப்புக் கூட்ட அழைப்பு

17-2-50 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு வேலூர் லட்சுமணசாமி டவுன்ஹாலில், திருவண்ணாமலை நகராண்மைக் கழகத் தலைவர் தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் தலைமையில் கூடி மாவட்டக் கழக அமைப்பும், மாவட்ட மாநாடு நடத்த வேண்டியதற்கான ஏற்பாடுகளும் செய்ய வேண்டியிருப்பதால் மாவட்ட, நகர, கிராமக் கழகங்கள் இரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனுப்ப வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எம். நடேசன்
அமைப்பாளர்
வ. ஆ. மாவட்ட தி. மு. கழகம்

# ★ மதிப்புரை ★

மதிப்புரை வேண்டுவோர் இரண்டு பிரதிகள் அனுப்பிவைக்க வேண்டும். (ஆ-ர்)

### "வள்ளுவர் கொள்கையும் வடவர் கொள்கையும்"

[ஆசிரியர்:—'ஆசிரியர் இறையனார்'; கிடைக்குமிடம்:—"தமிழகம்", இலிங்காயர் தெரு, உறையூர், திருச்சிராப்பள்ளி; விலை ரூபாய் ஒன்று.]

இந்த நூல் வடவாரிய ஆரியகுடை அறிவுக்கும் பொருந்தாக் கொள்கைகளையும், தென்னாட்டவராகிய திராவிடருடைய பண்புகளையும் விளக்கிக்காட்டுவதற்கென்றே தீட்டப்பட்ட ஓர் அரிய ஆராய்ச்சி நூலாகும். உலகம் போற்றும் திருவள்ளுவரின் கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டே இந்நூல் எழுந்துள்ளது. இதில் வள்ளுவர் யார்? தென்னாட்டின் தனிச்சிறப்பு, தென்புலத்தார் என்ற சொல்லுக்கு வள்ளுவர் கொண்ட கருத்து என்ன? என்பனபோன்ற ஐயந்திரிபுக்கு இடமின்றி நல்ல முறையில் ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளது.

பரிமேலழகரின் கருத்துரை எப்படித்தமிழர்க்கு ஒவ்வாதது என்பதும், ஆரியர் கருத்துக்களிலிருந்து வள்ளுவர் கருத்து முற்றிலும்வேறுபட்டதென்பதும் பல பேராசிரியர்களின் மேற்கோள்களுடன் ஆணித்தரமாக விளக்கப்பட்டுள்ளது. இதன் ஆசிரியர் மிகவும் நுண்ணிய ஆராய்ச்சிகளைச் செய்து, தமிழ் மக்களுக்கு இந்நூல் வாயிலாக புதிய கருத்துக்களைவழங்கியுள்ளதைக்கண்டு பாராட்டுகிறோம். பொதுவாக இந்நூலைப் பள்ளி மாணவர்களுக்கும் தமிழ்த் துணைப்பாடமாகவைக்கலாமென்பதே எமது தீர்ப்பு!

* * *

### "தமிழ்ப்பணி"

[எழுதியவர்:-தமிழ்ப்பணி குழுவினர்; கிடைக்குமிடம்:—தமிழகம், உறையூர், திருச்சிறாப்பள்ளி; விலை அணா 12.]

நமது தாய்மொழியாகிய தமிழ்மொழி, தமிழ்நாட்டுக்கு மட்டுமன்றி உலகிற்கே பொதுமொழியாகும் என்று கூறுவதற்கான தகுதி படைத்தது என்று, தக்க ஆதாரங்களுடன் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. உலகில் எம்மொழிக்குமில்லாத தனிச்சிறப்புகள் தமிழ்மொழிக்கு உண்டு என்பதை இந்நூலின் வாயிலாகப் பரக்கக் காணலாம். பண்டைத் தமிழிலிருந்து பிறந்த பிறமொழிகள், இடைக்காலத்தில் பிறந்தவை ஆகியவை இதில் விளக்கப்பட்டுள்ளன. தமிழ் மூச்சங்கங்களின் வரலாறு தமிழிலிருந்து அழிந்த நூல்களின் பட்டியல் இன்னபிற தொன்மை வாய்ந்த பழம் பெருமைகள் அனைத்தும் இதில் தரப்பட்டுள்ளது.

மேலும் தமிழுக்கு இனி நாம் செய்யவேண்டிய பணியாது என்பதைக்கூறி, அதற்கான திட்டங்களைத்தந்துள்ளனர் இதன் ஆசிரியர். இன்னும் தமிழில் அமைக்கவேண்டிய அருங்கலைகளையும் அவைகளுக்கேற்ற தனித்தமிழ்ச் சொற்களையும் தமிழ் மக்களுக்குஎடுத்துக்கூறி தமிழ்ப்பணிக்கு வருமாறு வற்புறுத்தியழைக்கப்படுகிறது. இந்நூலின் வாயிலாக தமிழ்ப்பணிக்கென்றே ஓர் தனிக் "குருகுலம்" அமைக்க வேண்டுமென கூறப்பட்டுள்ளது. தமிழார்வமுள்ள இளைஞரும் பெரியோரும் கட்டாயம் படிக்கவேண்டிய நூல்களில் இதுவுமொன்றாகும்.

* * *

### "சிற்பி"

[கிடைக்குமிடம்:—ஹமீது மத் பி. ஏ. எம். கமால்; கிடைக்குமிடம்:—குணவேல் பிரஸ், கோயம்பத்தூர்; விலை அணா 1.]

'சிற்பி' என்னும் வார இதழின் முதல் வெளியீடு வரப்பெற்றோம். மனிதனை மனிதன் சாகடிக்கும் நிலை நீங்கி "எல்லோரும் ஓர் குலம்" என்ற உயர் நோக்கத்தை நாட்டில் பரப்ப இவ்வேடு பணிபுரியும் எனத் தெரிகிறது.

* *

### "மின்னொளி"

[ஆசிரியர்:— ஈ. கண்ணன் கிடைக்குமிடம்: தென்றல் நூற்பதிப்புக் கழகம், சலகண்டபுரம், சேலம் மாவட்டம். விலை: அணா ஆறு.]

அறியாமை இருளில் இருந்து அவதிப்படும் நம் நாட்டு பெரும்பாலான கிராமங்களுக்கு 'மின்னொளி' ஒரு அறிவுவிளக்கென்றே கூறலாம். சமுதாயத் துறையிலே நம் நாட்டில் செய்ய வேண்டிய தொண்டுகளில், கல்வியின்மை, அறியாமை, மூடநம்பிக்கை, இன்னபிற பழக்கவழக்கங்கள் இவைகளை விரட்டியடிக்கும் தொண்டே இன்றியமையாததும், மிக அவசரமுமானதாகும். அத்தகுப்பணியையே செய்கிறார் 'மின்னொளி'யில் வரும் கிராமப் பள்ளி ஆசிரியரான செல்லத்துரை. இந்தப் பணிக்கு எவ்வளவோ இடையூறுகளை நோக்கி எதிர் நீச்சலடிக்கிறார். இறுதியில் பழமைப்பேயாட்டமெல்லாம் ஓட்டமெடுக்கின்றன. முடிவில் செல்லத்துரையின் குறிக்கோள் நிறைவேறுகிறது. சேற்றில் முளைத்த செந்தாமரையென திகழ்ந்த அக்கிராமத்தின் மணியக்காரரின் மகள் மின்னொளியும் செல்லத்துரையுமே இக் கதையின் 'கதாநாயகர்கள்.' இருவரும் மணங்கொள்கிறார்கள். அவர்களின் பகுத்தறிவுத் தொண்டு கிராம மக்களிடையே விழிப்பைத் தருகிறது.

நாடகவடிவில் எழுதப்பட்டுள்ள இந்த நூல் சிற்றூர்களிலும், நகரங்களிலுமுள்ள பள்ளிகளைத்திலும் மாணவர்களைக்கொண்டு நடிக்கப்பெறும் நாடகங்களுக்குப் பெரிதும் பயன்படும் என்று கருதுகிறோம். பள்ளி நாடகங்களுக்கென்றே இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளதாக இந்நூலாசிரியர் கூறுகிறார்.

* * *

### ஆயர் வாழ்வு

[ஆசிரியர்:—மதுரை. இ. இராமசாமி; கிடைக்குமிடம்:- யாதவன் பிரசுராலயம், சென்னை-5; விலை:—அணா 8.]

உண்மையான காதலர் வாழ்வு இடர்பாடுகளுள்ளாவது இயல்பல்லவா? அதுபோலவே கண்ணுசாமி, விஜயாதவிலும் இடர்பாடு நேருகிறது. இவ்விடர் பாட்டுக்குக்காரணமாக கோனார் முனைகிறார். கதையின் முடிவு உள்ளத்தைக்கலக்க வைக்கிறது. இஃதோர் சோகச் சித்திரம். நாட்டுப்புறவிலையும் ஆயர் குலமக்களின் அல்லல்களையும் விளக்குகிறது இந்நூல். படித்துப் பாருங்கள்.

* * *

### வரப்பெற்றோம்

**"நேசவாளி"**
(வார வெளியீடு)

[ஆசிரியர்:— எம். கே. கோபால் கிடைக்குமிடம்:- மானேஜர். நேசவாளி, கோவை. விலை அணா ஒன்று]

**'தேவாங்கன்'**
(ஆண்டு மலர்)

[ஆசிரியர்: எம். கே. கோபால்; வெளியிட்டோர்: கொங்கு வரி பப்ளிகேஷன் லிமிடட்; 2, தேவாங்கபேட்டைத்தெரு, கோவை]

**அரசகுல அரசியல் மலர்**

[பதிப்பாளர்: எஸ். கணபதி; கிடைக்குமிடம்: 'கூத்தி வாசம், காந்தி பார்க் மேலைத் தெரு, கும்பகோணம். விலை ரூபாய் ஒன்று]

## இனி நடப்பவை

சென்னை:—குலை மக்கள் மறுமலர்ச்சிக் கழகத்தின் சார்பில் 12—2—50 ஞாயிறு காலை 10 மணிக்கு குலை, வாத்தியார் சந்தப்பிள்ளைத்தெரு நகராண்மைக்கழகப் பள்ளியில் தோழர் க. தங்கவேலர் பி. ஓ. எல் (ஆனர்ஸ்) திருக்குறளில் 'புகழ்' என்னும் பொருள் பற்றி பேசுவார்.

* * *

பெங்களூர்:—பெங்களூர்சிடி மலேபேட்டை, எஸ். எஸ். கே. சங்க சொற்பொழிவு மன்றத்தில் 12-2-50 மாலை 4 மணிக்கு 'அறிவாலயம்' ஆரம்ப விழா நடைபெறும். தோழர் தி. ரா. தர்மராசன் தலைமைவகிப்பார். சென்னைத் தோழர்கள் டி. எஸ். வேலன், எஸ். சி பாலையா ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

மாமவரம்:—இசை வேளாளர் மத்திய சங்கக் கூட்டமொன்று 13—2—50-ல் கூறை நாட்டில் தோழர் எஸ். சிவவடிவேல் அவர்கள் தலைமையில் நடைபெறும் செயற்குழு உறுப்பினரனைவரும் தவறாது வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

* * *

வாணியம்பாடி—இவ்வூர் இஸ்லாமியா உயர்நிலைப்பள்ளித்தலைமை ஆசிரியர் தோழர் கே. அப்துல் சொத்தூஸ் பி. ஏ. எல் டி. அவர்களின் வெள்ளி விழா, 12-2-50 ஞாயிறு மாலை நடைபெறும். கல்வி அமைச்சர் தோழர் கே. மாதவ மேனன் தலைமைவகிப்பார். தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ; டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள். ராஜா சர். முத்தையாசெட்டியார் தலைமைஆசிரியரின்படத்தைத் திறந்துவைப்பார்.

* * *

சென்னை—தோழர் கே. வி. இராஜமாணிக்கம், தோழியர் எம். பி. கண்ணம்மாள், தோழர் கே. வி. சின்னையன், தோழியர் ஈ. மணியம்மாள் ஆகியோர் திருமணம், 12-2-50 ஞாயிறு காலை 8-30 மணிக்கு, தோழியர் என். இராமதிலகம் அம்மையார் தலைமையில் சென்னை, பெரம்பூர் பாரக்ஸ் கலியாண மேஸ்திரி தோட்டம் 117 என்னுள்ள இடத்தில் நடைபெறும். தோழர்கள் புலவர் வே. த. அர்ச்சுனனார், பூ. கணேசன் பி. ஏ. (ஆனர்ஸ்) கா. அப்பாத்துரை எம். ஏ. எல். டி., மா. இளஞ்செழியன் பி. ஏ. (ஆனர்ஸ்) ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

### ஆஸ்திரேலியா ராக்கெட் ரேஞ்சில் கம்யூனிஸ்டு உளவாளி எவருமில்லை

மெல்போன், பிப் 9—

தென் ஆஸ்திரேலியாவிலுள்ள உமாராம் ராக்கெட் ரேஞ்ஜில் இரு கம்யூனிஸ்ட்கள் கண்டு பிடிக்கப் பட்டதாக வெளியான செய்தி உத்யோக பூர்வமாக மறுக்கப்பட்டிருக்கிறது. சிப்பந்திகளிலிருந்து யாரும் கம்யூனிஸ்ட் என்பதற்காக வேலையிலிருந்து நீக்கப்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### செய்தியனுப்புவோர் கவனிக்க

"மாலை மணி"யில் பிரசுரிப்பதற்கென அனுப்பப்படும் செய்திகள் யாவும் ஆசிரியர் "மாலை மணி" என்ற முகவரிக்கே அனுப்பப்பட வேண்டும். அப்படியின்றி 'மானேஜர்' என்றோ வேறு பெயர் களிட்டோ முகவரி எழுதி யனுப்பப்படும் செய்திகள் தவறிவிட்டுப்போக நேரிடும் என்பதை யறியவும்.

(ஆ—ர்)


## தென் ஆற்காடு மாவட்ட
# தி. மு. கழக முதல் மாநாடு

26—2—50 ஞாயிறன்று
குறிஞ்சிப்பாடியில் "திருவள்ளுவர் பந்தலில்"
நடைபெறும்

பொதுச் செயலாளர் சி. என். ஏ. அவர்களும்
மற்றும் பல சொற்பொழிவாளர்களும் கலந்துகொள்வார்கள்

கு. கி. ப. பழனியப்பன், இரா. பழனிசாமி, கு. தா. குழந்தைவேலன், (செயலாளர்கள்)
குறிஞ்சிப்பாடி பட்டாபி, (விளம்பர உறுப்பினர்)
இரா. சாம் சிவம், (வரவேற்புக் கழகத் தலைவர்)
அ. ப. வைத்திலிங்கம், (பொருளாளர்)
பொ. தங்கராசு, (தொண்டர் படைத் தலைவர்)



## அறிவை விளக்கும் ஆராய்ச்சி நூல்கள்

(ஆசிரியர்: இறையனார்)

**திருக்குறள் ஆராய்ச்சி ... ரூ. 1-8-0**
குறளைப்பற்றி அறியவேண்டியவைகள் அனைத்தும் அடங்கியது

**வள்ளுவர் கொள்கையும் வடவர் கொள்கையும் ரூ. 1-0-0**
(தமிழர் நெறிக்கு வட நூல் நெறி மாறுபவை எனக்காட்டுவது)

**தமிழ்ப் பணி ... ரூ. 0-12-0**
(தமிழைப பற்றி அறியவேண்டியவைகளையும், தமிழ் வளர்ச்சிக்குப் புரியவேண்டியவைகளையும் விளக்குவது)

**திருக்குறள் விஞ்ஞான ஆராய்ச்சி உரை** விரைவில் வரும்

கழகங்களும் மாணவர்களும் 10-க்கு மேற்பட்ட படிகளுக்கெழுதினால் முக்கால் விலை. நகரங்களில் ஏஜண்டுகள் தேவை. கழிவு 25% ரயில்வே புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

முகவரி:— தமிழகம் — உறையூர் — திருச்சி


### ஆம்பூரில் அன்பழகனார்!

26—2—50 ஞாயிறு
மாலை 6-மணிக்கு
தி. மு. கழகப் பொதுக் கூட்டம்
க. அன்பழகன் எம். ஏ. அவர்கள்
சொற்பொழிவாற்றுவார்
அனைவரும் வருக!

### சென்னை மாவட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்டம்

12-2-50 ஞாயிறு மாலை 3-மணிக்கு மண்ணடி "மாலை மணி" அலுவலகத்தில், டிை கூட்டம் நடைபெறும். அண்மையில் நடைபெற்ற மாநாட்டின் வரவு செலவுக் கணக்குகள் ஒப்படைக்க வேண்டியிருப்பதால், மாவட்டக் குழுவின் நிர்வாக உறுப்பினர்கள் தவறாதுவந்து கலந்துகொள்ள விழைகின்றேன்.

கே கோவிந்தசாமி
செயலாளர்

### கர்நாடக மாவட்ட தி. மு. கழக அமைப்புக் கூட்டம்

கர்நாடகப் பகுதி தி. மு. கழக தோழர்களே!

கோலார் தங்க வயல் தி. மு. கழகச்சார்பாக மேற்படிகர்நாடக மாவட்ட அமைப்புக் கூட்டம் கீழ்க்காணும் முறைப்படி நடைபெறும். கிளைக்கழகத்தோழர்கள் இதையே அழைப்பாகக் கொண்டு வருமபடி வேண்டுகிறோம்.

அமைப்புக் கூட்டத் தலைவர் தோழர் ஏ. இரத்தினசபாபதி.

காலம்: இரவு 8 மணி. தேதி 12—1—50. இடம் தி. மு. கழகம் பிரமா விலாஸ் கார்ப்பரேஷன் டவுன். கே. ஜி. எப். என. வி உறுப்பினர் டி. கே சின்னத்துரை அறிவிக்கிறார்.


## மூல வியாதிக்கு
### கருணைக் கிழங்கு லேகியம்

மூல முளைகள், ரத்தம், சீழ் வடிதல், மூலப் பவுத்திரம், கட்டி, நீர்க் கசிவு, ரணம் சுகமாகும். வாய்வு, அஜீரணம், மலபந்தம் நீங்கும். 3 நாளில் குணம்தெரியும்.

12 நாள் மருந்து ரூ. 3—0—0
12 நாகபஸ்பம் ரூ. 2—0—0

P.S.R. பங்கஜம் வைத்யசாலை
பழனி (S. I.)


## பொழுதுபோக்கு

**தமிழ் —நாடகம்**

ஒற்றைவாடை — கட்டபொம்மன்

**தமிழ்**

| | |
|---|---|
| பிராட்வே | — பொன்முடி |
| கமலி | — " |
| சன் | — ஆதித்தன்கனவு |
| சரஸ்வதி | — ஞானசௌந்தரி |
| திருமகள் (சைதை) | வாழ்க்கை |
| மகாராணி | — " |
| பாரகன் | — " |
| லட்சுமி | — " |
| கிரௌன் | — கிருஷ்ணவிஜயம் |
| செயிட்டி | — " |
| சினிமாசென்ட்ரல் | நல்லதம்பி |
| பிராத் | — ரத்னகுமார் |
| சித்திரா | — " |

**தெலுங்கு**

| | |
|---|---|
| வெலிங்டன் | — குணசுந்தரி |

**ஆங்கிலம்**

| | |
|---|---|
| Minerva | — The Lady Objects |
| Casino | — Joan of Arc |
| New Globe | — One Million B. C. |
| New Elphinstone | — My Friend Irma |
| Midland | — The Three Musketeers |
| Roxy | — Black Magis |

**ஹிந்தி**

| | |
|---|---|
| அசோக் | — ஷப்னம் |
| செலக்ட் | — அந்தாஜ் |
| ஸ்டார் | — டில்-கி-துனியா |

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1